www.tamilarangam.net

# ஈழப் போராளிகளின்
# சிந்தனைக்கு...

[illegible]

ஒரு
**தோழமைப் பொறி**
வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முன்னுரையாக...

ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை முழுமையாக ஆதரிப்பவர்கள் நாங்கள். இந்தப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கம் எங்களுக்கும் கவலையளிக்கிறது. தேக்கத்திற்கான காரணங்கள் குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது.

எங்களுடைய கருத்துக்களில் தவறுகள் இருக்கலாம். இராணுவ நடவடிக்கைகளில் எங்களுக்கு அனுபவம் கிடையாது. அனுபவமுள்ள தோழர்கள் எங்களைக் காட்டிலும் அதிகம் அறிந்திருக்கலாம். எனினும் எங்கள் கருத்துக்குப்பட்டதை ஈழப் போராளிகள் முன் வைக்கிறோம் தவறுகளைச் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்கிறோம். எங்களிடமிருந்து ஏதேனுமவர்கள் அறிந்து கொள்ள முடிபமானால் மகிழ்ச்சியடைவோம்.

—தோழமை.

www.tamilarangam.net

# ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு...

எரிதழல்

'தோழமை' வெளியீடு
20, கோதண்டபாணிதெரு,
குடந்தை 612 001

விலை
ரூபாய்
ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு...

**எரிதழல்**

I. ஈழ விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். இந்தத் தேக்கம் கீழ்க்கண்ட விதங்களில் வெளிப்படுகின்றது.

1. ராணுவ நடவடிக்கைகளில் ஒரு தேக்கம்.
2. முன் தளத்தில் ராணுவத்திற்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளி.
3. பின் தளத்தில் போராளிகளுக்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளி.
4. அமைப்புகளுக்குள் தனி நபர் வாதம், முரண்படுபவர்களைப் பழி தீர்க்கும் போக்கு போன்ற அராஜக நடவடிக்கைகள்.

ஈழ விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தத் தேக்கங்களிலிருந்து விடுபடுவது அவசியம். இதனைச் சாத்தியமாக்க முதலில் இந்தத் தேக்கத்திற்கான அடிப்படைக்காரணங்களை விளங்கிக் கொள்வது அவசியம்.

## II. அடிப்படைக் காரணங்கள்:

1. அடிப்படைக் கோட்பாட்டுப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்காமை:

அ. இலங்கை அரசின் வர்க்கச் சார்பு.

ஆ. ஈழப் பிரச்சினையில் அமெரிக்க— ரசிய வல்லரசுகளின் பங்கு

www.tamilarangam.net

இ. இந்திய அரசின் வர்க்கச் சார்பும், ஈழ விடுதலையில் இந்திய அரசின் ''அக்கறையும்''

ஈ. ஈழ விடுதலைப் போரின் தன்மை-மக்கள் யுத்தக் கோட்பாடு பற்றிய முடிவு.

உ. விடுதலைக்குப் பின் உருவாக்கப் போகும் அரசு பற்றிய கண்ணோட்டம்.

ஊ. மேற்கண்ட எல்லாவற்றிற்கும் அடிப்படையான—விடுதலை இயக்கங்களின் உலகப் பார்வை பற்றிய இறுதி முடிவின்மை (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மார்க்சிய—லெனினியப் பார்வையை நடைமுறைக் கோட்பாடாக ஏற்றுக் கொள்வது குறித்து).

எடுத்துக் காட்டாக ஈழ விடுதலைப் போரில் இந்திய அரசு, ரசிய அரசு ஆகியவற்றின் ''அக்கறை'' பற்றிய தெளிவின்மையோடு முழுமையாக இந்திய அரசைச் சார்ந்து நின்றதனால் இன்று இந்திய ஆளும் வர்க்கத்திற்கும், இலங்கை ஆளும் வர்க்கத்திற்கும், ஈழ ஆதிக்க சக்திகட்கும் பொருந்துகிற ஒரு ''தீர்வை'' இயக்கங்களின் மீது இந்திய அரசு சுமத்துவதனால் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை குறிப்பிடலாம். இதே போல மக்கள் யுத்தம் பற்றிய கோட்பாட்டுத் தெளிவின்மையால் முதலாளிய ராணுவக் கண்ணோட்டத்துடன் மக்களை அணுகி, மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கும் தன்மையினால் விளைந்த தேக்கத்தைக் குறிப்பிடலாம்.

2. ஈழ விடுதலை அமைப்புக்கள் என்பன பேரின வாதத்திற்கெதிரான போர்க்குணமிக்க விடுதலை இயக்கங்களாகத் திகழும் அதே நேரத்தில் ஈழத்தில் சமுகப் படிநிலை வேறுபாடுகளை மறு உற்பத்தி செய்யும் கருவியாகவும் விளங்கும் தன்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விளக்கம்: வர்க்கமாகப் பிளவுண்ட சமுதாயங்களில் அரசின் பணி வர்க்க வேறுபாடுகளைத் தக்க வைக்கும் பொருளாதார அமைப்பை மறு உற்பத்தி செய்வது. இந்த அமைப்பில் உருவாகும் நிறுவனங்கள் யாவும் வெளியில் நிலவும் படிநிலை வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும். அந்தப் படிநிலை வேறுபாடுகள் தொடரவே வழி வகுக்கும். ஆக்ரமிப்பாளருக்கெதிரான போராட்டங்கள் என்பது கூட இந்தத் தன்மையிலிருந்து அமைப்புக்களை விடுவிப்பதில்லை.

ஈழ விடுதலை அமைப்புக்கள் அனைத்தையும் வர்க்க ரீதியாகப் பரிசீலிக்கும்போது அமைப்புக்களில் ஆதிக்கத்திலிருக்கும் அனைவரும் வெளியிலுள்ள சமூகத்திலும் ஆதிக்க சக்திகளாக இருப்பவர்களும் அவர்களின் பிரதிநிதிகளுமேயாவர். சமூகப் படிநிலையின் அடிநிலையில் இருப்பவர்கள் இயக்கங்களில் வரும்போது அங்கும் அவர்கள் அடி நிலையிலேயே இருத்தப்படுகின்றனர். ராணுவ ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் இது நிலை நிறுத்தப்படுகிறது.

இன்று நிலவும் ஆதிக்க அமைப்பில் 'தலைவர்கள்' எவ்வாறு உருவாகிறார்களோ அப்படியே விடுதலை அமைப்புக்களிலும் தலைவர்கள் உருவாகின்றனர். மேலும் இன்றைய அமைப்பில் தலைவர்களின் செல்வாக்கு தக்க வைக்கப்படுவதற்கு என்னென்ன விதமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றனவோ அவையே அமைப்புக்களிலும் கையாளப்படுகின்றன.

அமைப்பு, ராணுவம் முதலியனவும் முதலாளிய நிறுவனக் கண்ணோட்டங்களுடனேயே ஒழுங்கமைக்கப் பட்டுள்ள ராணுவத்தை எடுத்துக் கொள்வோம். முதலாளிய ராணுவம் என்பது வெளிநாட்டு ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பதற்காக மட்டுமல்ல. உள்நாட்டு ''ஆபத்து''க் களிலிருந்தும் நாட்டைக் 'காப்பாற்றுவதற்காக'' உருவாக்கப் பட்டுள்ளது. மக்களைப் பற்றிய அதன் கண்ணோட்டம் வெளிநாட்டு ஆபத்துக்களிலிருந்து காப்

www.tamilarangam.net

பாற்றப்பட வேண்டியவர்கள் என்பதும் ஆயுத பலத்தால் அடக்கப்பட வேண்டியவர்கள் என்பதுமாகும். எனவே முதலாளிய ராணுவத்திற்கும் மக்களுக்குமிடையே ஒரு பிளவு எப்போதும் தக்க வைக்கப் படும். இன்றைய ஈழ விடுதலை ராணுவங்களும் இத்தகைய கண்ணோட்டத்தையே தம் நாட்டு மக்களைப் பற்றியும் கொண்டுள்ளன என்பதற்குச் சான்றுகள் நிறைய உள்ளன. துவக்குகளுடன் ஜீப்புகளில் வேகமாக வருகின்ற விடுதலைப் போராளிகள் சிங்கள ராணுவத்தைப் போலவே மக்களின் அச்சத்திற்குப் பாத்திரமானவர்களாக உள்ளார்கள் என ஈழ மக்கள் பலரும் கூறக் கேட்டிருக்கிறேன். வேதாரணியம் சம்பவங்களும் இதற்கோர் சான்றாகும்.

''எங்கள் மக்கள் பலர்
அச்சத்துடனேயே பாதையில் நடக்கிறார்கள்
ஆமிக்காரருக்கு மட்டும் அஞ்சியல்ல!
எங்கள் போராளிகள் ஓட்டும்
வாகனங்களின் வேகத்திற்கும் அஞ்சித்தான்

என ஓர் ஈழக் கவிதை ஒன்றும் சமீபத்தில் படித்தேன்.

மக்கள் விடுதலை ராணுவம் என்பது மக்களைச் சார்ந்து. மக்கள் நம்பிக்கைக் குரியதாக மக்களிடமிருந்து பொருள், ஆயுதம் முதலியவற்றை விரும்பிப் பெறுவதாக இருக்க வேண்டுமல்லவா?

அதேபோல ஒரு மக்கள் விடுதலை ராணுவத்திற்குள், அதிகாரிகளுக்கும் அடிமட்ட வீரர்களுக்குமிடையே ஒரு சமூக வேறுபாடு (Social division) இருப்பதில்லை. முடிவுகளை எடுப்பதில் அடிமட்ட வீரர்களுக்குப் பங்கில்லை என்பதும் மேல்மட்ட உத்தரவுகட்குக் கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிவதே அவர்களின் வேலை என்பதும் முதலாளிய ராணுவக் கண்ணோட்டம். தனியான உடை, தனியான வாழ்க்கை வசதிகள், தனியான உணவருந்தும் இடம் ஆகியவற்றின் மூலம் அதிகாரிகள் முதலாளிய ராணுவத்தில் திட்டமிட்டே வீரர்களிடமிருந்து பிரிக்கப்படுகின்றனர். இருவருக்குமிடையில் அச்ச உறவே நிலவுகின்றது. ஈழ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலை ராணுவங்களுக்குள்ளும் இத்தகைய நிலையையே காண்கிறோம். ஒரு கமாண்டர் வீரர்களுக்கு முன் சிகரெட் பிடிக்கலாம். ஆனால் ஒரு வீரர் கமாண்டருக்கு முன் சிகரெட் பிடித்தால் கடும் தண்டனை உண்டெனச் சில நாட்களுக்கு முன்பு ஒரு அமைப்பைச் சேர்ந்தவர் குறிப்பிட்டார்.

ராணுவத்தில் மட்டுமின்றி இதர அரசியல், நிர்வாக அமைப்புகளிலும் இந்நிலையே காணப்படுகின்றது.

3. **சுத்த ராணுவக் கண்ணோட்டம்:** அரசியலமைப்பு, பிரச்சார அமைப்பு ஆகியவற்றைக் காட்டிலும் ராணுவ அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பது. அரசியலமைப்பை ராணுவ அமைப்புக்குக் கீழாகக் கொண்டு வருவது.

4. லும்பன் சித்தாந்தங்களும் குட்டி பூர்சுவாச் சித்தாந்தங்களும் கலந்த அராஜகப் போக்கு அமைப்புக்குள் நிலவுவது.

5. தம்மை விடப் புரட்சிகர சக்திகளும் முக்கியமானவர்களும் இல்லை என்கிற குட்டி முதலாளியக் கண்ணோட்டத்தின் விளைவாக பலத்தைச் சேமித்தல் என்கிற பெயரில் ராணுவ நடவடிக்கைகட்கு முட்டுக் கட்டை போடுதல்.

6. மேற்கண்ட காரணங்கள் அனைத்திற்கும் மூலாதாரமான காரணத்தை அமைப்புக்களின் வர்க்கக் கூட்டில் (Class compo riition) தேட வேண்டும்.

விளக்கம் : வெளியிலுள்ள சமூகப் படிநிலைகள் அமைப்பிற்குள்ளும் பேணப்படுகின்றன என முன்னர் குறிப்பிட்டோம். வெளியிலுள்ள ஆதிக்க சக்திகள் தவிர முதலாளிகள், குட்டி முதலாளிகள், குட்டி முதலாளிய அறிவுஜீவிகள், பாட்டாளி வர்க்கம், லும்பன்கள் ஆகியோர் இன்று விடுதலை அமைப்பிற்குள் பெரும்பான்மையாக இருந்து வருகின்றனர். அமைப்பிற்குள்ளிருக்கும் இளைஞர்களின் தியாக சிந்தனையையும், போர்க் குணத்தையும் குறைத்து மதிப்பிடாத அதே நேரத்தில் இன்றுள்ள பொருளாதாரத் தேக்கத்தினாலும், பாதுகாப்பின்மையாலும் ஏராளமான இளைஞர்கள் போதிய உணர்வுகளின்றி அமைப்புகட்கு வந்துள்ளதையும், உதிரிப்பாட்டாளிகள்

www.tamilarangam.net

எனப்படும் லும்பன்கள் ஏராளமாக அமைப்பிற்குள் வந்துள்ளமையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முக்கிய அம்சங்களாகும். மேலும் தேசிய இனப் பிரச்சினை முற்றுவதற்கு முன்னரே இலங்கையில் அரைக் காலனியக் கலாச்சாரச் சீரழிவுகள் உச்சமடைந்து பாட்டாளி வர்க்கத்திடம் பாட்டாளி வர்க்க உணர்வை மழுங்கடித்து அவர்களைப்போர்க் குணமற்ற அமைப்பு விசுவாசிகளாக ஆக்கி வைத்திருந்ததையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே அமைப்பிற்குள் கீழ்க்கண்ட வர்க்கங்களை நாம் காணலாம்.

பெருந் தமிழ் முதலாளிய சக்திகள்
குட்டி முதலாளிய சக்திகள்
குட்டி முதலாளிய அறிவு ஜீவிகள்
லும்பன் சக்திகள்
பாட்டாளி வர்க்கம்.

பெருந் தமிழ் முதலாளிய சக்திகள் அமைப்பிற்குள் ஆதிக்கம் செலுத்துகின்றன. போதிய வர்க்க உணர்வில்லாத பாட்டாளி வர்க்கம் முதலாளிய சக்திகளுக்கு விசுவாசமாக இருக்கிறது. எனினும் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை இது கவலையுடன் ஆராயத் தொடங்கியிருக்கிறது. குட்டி முதலாளிய சக்திகளும்லும்பன் சக்திகளும் அமைப்பிற்குள் தனிநபர் வாதப் போக்கிற்கும், சந்தர்ப்ப வாதத்திற்கும், இவற்றின் விளைவான அராஜகத்திற்கும், அமைப்பிற்குள் கலாச்சாரச் சீரழிவு, கள்ளக் கடத்தல் மூலம் பொருள் சேகரித்தல் போன்றவற்றிற்கும் காரணமாகின்றன. அறிவு ஜீவிகள் முழுமையான விடுதலை வேட்கையும் உணர்வும் உடையவர்களாக இருந்தாலும் அமைப்பைக் கையாள்வதிலுள்ள குறைபாடுகளினாலும் மேற்கண்ட சந்தர்ப்பவாத சக்திகளின் நடவடிக்கைகளாலும் அமைப்பின் முதலாளியத் தன்மையினாலும் அன்னியப்பட்டு ஒதுக்கப்படும் நிலைக்குள்ளாயினர். பலர் ஒதுக்கப்பட்டனர். எனினும் அமைப்பிற்குள் இருக்கும் இவர்களே இன்று ஒரு ஆரோக்கியமான உள்கட்சிப் போராட்டத்தைத் தொடங்கும் நிலையிலுள்ளனர்.

லும்பன் வர்க்கத்தையும், குட்டி முதலாளி வர்க்கத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரையும் சந்தர்ப்பவாதிகள் எனவும் அராஜக வாதிகள் எனவும் கூறத் தேவையில்லை. லும்பன் போக்கும் குட்டி முதலாளியப் போக்குமே இவ்விரண்டிற்கும் காரணம் என்பதே இதன் பொருள். நேர்மையான விசுவாசத்துடனும், நேர்மையான விடுதலை ஆர்வத்துடனும் கூடப்பலர் இந்தப் போக்கிற்கு, இதுவே சரி என்கிற விசுவாசத்தோடு ஆட்பட்டுள்ளனர். இதேபோல வர்க்க உணர்வு வாய்க்கப் பெறாத பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் உடனடிப் புரட்சிகர சக்திகள் எனவும் கூறத் தேவையில்லை. எனவே கீழ்க்கண்டவாறு இவர்களை வகைப்படுத்தலாம்.

- வலது சாரிகள்
  - ஆதிக்க சக்திகள்
  - சந்தர்ப்ப வாதிகள்
  - நேர்மையான வலதுவிசுவாசிகள்
  - (முதலாளிகள், குட்டி முதலாளிகள், லும்பன்கள், உணர்வுபெறாத பாட்டாளிகள்)
- இடது சாரிகள்
  - இடது அறிவுஜீவிகள்
  - உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கம்
  - (இடது குட்டி பூர்சுவா அறிவு ஜீவிகள், உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கம்)

7. அணிகளுக்கு உலகக் கண்ணோட்டக் (தத்துவக்) கல்வியின்மை : இது உலகக் கண்ணோட்டம், வழிகாட்டும் தத்துவம் ஆகியவை பற்றிய தெளிவின்மையோடு இணைந்ததாகும், வழிகாட்டும் தத்துவம் பற்றிய பிரச்சினைக்கு முடிவு கட்டிய பின்னரே அதனைப் போதிப்பது பற்றிய பிரச்சினை எழுவதால்.

www.tamilarangam.net

## III. குறைகளைக் களைந்து தேக்கத்தை உடைத்தல் :

தேக்கத்திற்கான பல்வேறு காரணம் ஒன்றோங்களு
டொன்று தொடர்புடையனவாய் அமைந்திருப்பது கண்
கூடு. எடுத்துக்காட்டாக பல அடுப்பலையான கோட்பாட்
டுப் பிரச்சினைகளைக் கோட்பாட்டளவிலே தீர்க்
காமை. தேக்கத்திற்கான முதற்காரணமாக குறிப்பிட்
டோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம்
எத்தகைய கருவியை (உலகப் பார்வையை-தத்துவத்தை)க்

கைக்கொள்ளப் போகிறோம் என்பது பிரச்சினை
யாகிறது. இலங்கை, இந்திய அரசுகளின் வர்க்கச் சார்
பையோ, விடுதலைப் போரின் தன்மையையோ, விடுத
லைக்குப் பின் அமைக்கப் போகும் அரசின் தன்மை
யையோ விளக்குவதற்கு நாம் மார்க்சிய-லெனினிய அணுகு
முறையைக் கைக்கொள்ளப் போகிறோமா இல்லை முத
லாளியப் பார்வைகளைக் கைக்கொள்ளப் போகிறோமா
என்கிற கேள்வி எழுகின்றது. இந்தக் கேள்விக்கான பதில்
அமைப்பின் வர்க்கக் கூட்டைப் பொறுத்தமைகிறது.
அமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் வலதுசாரிகள் மார்க்சிய—
லெனினியப் பார்வையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.
இதனை அவர்கள் வெளிப்படையாக அறிவிக்கப் போவ
தில்லையாயினும் அதுவே உண்மை. இவர்கள் குறிக்
கோள் வெற்றியடைந்தால் அமைப்பில் வலதுசாரிகளின்
கை மேலும் ஓங்கும். மேலும் மேலும் முதலாளியத் தன்மை
யில் ராணுவமும், அமைப்பும் புனருத்தாரணம் செய்யப்
படும். மேலும் மேலும் இந்திய அரசைச் சார்ந்து நிற்கும்
தன்மையும், இந்திய—இலங்கை ஆளும் வர்க்கம் திணிக்
கும் 'தீர்வைச்'ச் சுமக்கும் நிர்ப்பந்தமும் ஏற்படும்.

தங்களது அற்புதமான இளமையைத் தத்தம் செய்து
விட்டு விடுதலைப் போரில் குதித்த போராளிகளின் கனவு
அதுவல்ல என்பது வெளிப்படை. முழுமையான சுய
நிர்ணய உரிமை பெற்ற விடுதலையாகவோ, பரந்துபட்ட
மக்களுக்கான விடுதலையாகவோ அது அமையாது
என்பதும் தெளிவு. எனவே அமைப்புக்குள் உள்ள இடது
சாரிகள் அமைப்புக்குள் உள்ள தங்கள் சக்திகளை ஒருமுகப்
படுத்துவதும், அதனைச் சந்தர்ப்பவாதிகட்கும் ஆதிக்க
சக்திகட்கும் எதிரான போராட்டத்தில் குவிப்பதும் இப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துள்ள நிலையில் அவசரமானதாகவும் அவசியமானதாக வும் ஆகின்றன.

இந்தப் பணி இடையூறுகள் மிகுந்ததெனினும், எளி தானதில்லையெனினும் நம்பிக்கை தளரக் கூடியதல்ல. உணர்வு பெற்ற பாட்டாளிகளைத் தங்கள் அணியில் இணைத்து, உணர்வு பெறாத பாட்டாளிகள் மத்தியில் தொடர்ச்சியான பிரச்சாரம் செய்வதன் மூலம், தேக்கங் களையும் காரணங்களையும் சுட்டிக் காட்டுவதன் மூலமும் அவர்களையும் இடதுசாரிகள் இணைத்தாக வேண்டும். வலது அணியில் நேர்மையான விசுவாசத் துடனும் விளங்குகிற லும்பன்களையும், குட்டி பூர்சுவா வர்க்கத்தினரையும் பிரச்சாரத்தின் மூலம் இடது அணிக்குக் கீழ் கொண்டு வருவது அவ்வளவு எளிதில்லை என்றாலும் சாதிக்க முடியாதது அல்ல. அமைப்புக்குள் உள்ள தேக்கங் கள், சீரழிவுகளைப் பற்றிச் சிந்திக்கத் துவங்கியுள்ள சூழலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சரியான கோணத்தில் விளக்குவதன் மூலம் இவர்களைச் சிந்திக்க வைக்க முடியும். அனைத்தையும் தியாகம் செய்து விட்டு போர்க்குணத்துடன் வந்துள்ள இவர்களைச் சரியான திசைக்குத் திருப்புவது அவ்வளவு கடினமானதல்ல.

எனவே மிகுந்திருப்பது ஆதிக்க சக்திகளும், சந்தர்ப்ப வாதிகளுமேயாவர். இவர்களைத் திருத்துவது என்பதைக் காட்டிலும் இவர்களிடமிருந்து இயக்கங்களை விடுவிப் பதே தலையாய பணியாகும். இந்த முயற்சிக்கெதிராக இவர்கள் சகல தந்திரோபாயங்களையும் பயன்படுத்துவர் என்பதில் ஐயமில்லை. ஏற்கெனவே ஆதிக்க நிலையி லுள்ள இவர்கள் தங்களின் முயற்சியில் வெற்றி பெறுவ தற்கான வாய்ப்பு அதிகம் என்பதிலும் ஐயமில்லை. எனினும் இடதுசாரிகள் மனந்தளராதிருப்பதற்கான சூழல் களும் இன்று நிலவுகின்றன என்பதையும் கணக்கிலெடுத் துக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் போரில் ஏற்பட்டுள்ள தேக்கமும், மக்களி டமிருந்து அமைப்புக்கள் அன்னியப்பட்டு நிற்கும் சூழலும் அமைப்பிற்குள் நிறைவேற்றப்பட்ட அராஜகங்களும் பழி வாங்கல் நடவடிக்கைகளும் அணிகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் வெளிப்பட்டு நிற்கும் தன்மையும் இன்று அணிகள் தம் புருவத்தை உயர்த்துவதற்குக் காரணமாகி யுள்ளன. இதன் விளைவாக பெரும்பான்மையான நேர்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யான சக்திகள் விடுதலைப் போர் பற்றியும் அதன் குறை நிறைகள் பற்றியும் அதிகம் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இந்தச் சூழலில் ஆதிக்க சக்திகள் இதற்கு முன் செய்தது போல பழைய நடைமுறைகளினடிப்படையில் அதிருப்தியாளர்களை நீக்க முடியாது. அப்படி முயன்றால் அவர்கள் அம்பலப்பட்டுப் போகும் வாய்ப்பு உண்டு.

இந்தச் சூழலில் ஆதிக்க சக்திகள், அதிருப்தியைச் சமாளித்து அதே சமயத்தில் தங்கள் ஆதிக்கத்தையும் தக்க வைக்க வேறு வகையான நடைமுறைகளையே கையாள்வர். அமைப்பில் ஜனநாயக பூர்வமான உள்கட்சி விவாதங்களுக்கு வாய்ப்பளிப்பது போலவும், சனநாயகப் பூர்வமான வாக்கெடுப்புகள் மூலம் தலைமையிலும், இதர அதிகாரப் பதவிகளிலும் பல்வேறு விதமான மாற்றங்களுக்கு வாய்ப்பளிப்பது போலவும் நடந்து கொள்வர்.

எனினும் இந்த விவாதங்களையும், நடைமுறைகளையும் தங்கள் மேற்பார்வையில் நடத்துவதன் மூலமும், இடதுசாரி சக்திகளை அவர்களது முழுமையான வீச்சுடன் செயல்பாட்டிற்கு அனுமதிக்காததன் மூலமும், ஏற்கனவே தங்களுக்குள்ள சுய செல்வாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலமும், நிலவும் ராணுவ, மற்றும் அமைப்புக்களிலுள்ள முதலாளியத் தன்மையின் மூலமும்

அ. ஆதிக்க சக்திகள் சிற்சில மாற்றங்களுடன் தங்களின் நிலையை மேலும் உறுதியுடன் மறு நிர்மாணம் செய்து கொள்வர்.

ஆ. முரண்படுகின்ற சக்திகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்துவர்.

ஆனாலும் உட்கட்சிப்போராளிகள் இதனால் சோர்ந்துவிடத் தேவையில்லை. இந்த விவாதங்களையும் நடைமுறைகளையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டு சந்தர்ப்பவாதத்தையும் பிற்போக்குத் தன்மைகளையும் அணிகளுக்கு அடையாளம் காட்டவும், அவர்களைச் சரியான அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பார்வையை நோக்கித் திருப்புவதற்கும் பயன்படுத்தலாம். இதிலும் உட்கட்சிப் போராளிகள் இரு வழிகளைப் பின் பற்றலாம்.

அ. ஏற்கனவே ஆதிக்க சக்திகளிடம் முழுமையாக வெளிப்பட்டுப் போனவர்கள் மேலும் மேலும் அணிகள் மத்தியில் பரவலாக நேர்மையான அதிருப்தியாளராக அறியப்படுவதே பாதுகாப்பு என்கிற வகையில் வெளிப்படையான தாக்குதல் களைத் தொடரலாம். சரியான கோட்பாடு களுக்காக வெளிப்படையாக நின்று போராட லாம்.

ஆ. முழுமையாக வெளிப்பட்டுப் போகாத சக்திகள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அவற்றின் குறை நிறைகளைப் பாரதூரமாக விமரிசிப்பதன் மூலமாக சரியான பார்வையை நோக்கி அணி களைத் திருப்பவும் நேர்மையான போராளியாக அணிகள் மத்தியில் தம்மை இனங்காட்டிக் கொள்ளவும் செய்யலாம். வெளிப்படையான முழங்கங்களை இவர்கள் முன் வைக்க வேண்டிய தில்லை. நபர்களின் மீது நேரடியாகத் தாக்குதல் களைக் குவிப்பதைக் காட்டிலும் பிரச்சினைகள் மூலமாக சந்தர்ப்பவாதத்தை அடையாளங் காட்டுவதே முக்கியம்.

இருசாரரின் நடவடிக்கைகளுமே அமைப்பின் மீது நம் பிக்கை ஏற்படத் தக்கனவாகவே இருப்பது நல்லது.

இந்தப் பொதுவான முன்னுரையின் பின்னணியில் தவறுகளைக்களைவதற்கான நடவடிக்கைகளாக கீழ்க் கண்டவற்றை முன் வைக்கலாம்.

1. அமைப்பு, ராணுவம் ஆகியவற்றை நிர்மாணிப்பதி லான முதலாளியக் கண்ணோட்டங்கள் நீக்கப்பட வேண் டும். ராணுவம், அமைப்பு ஆகியவற்றுள் மேல் மட்டத்

www.tamilarangam.net

தினருக்கும், அடிமட்டத்தினருக்குமான உறவுகளும், ராணுவத்திற்கும் மக்களுக்குமான உறவுகளும் சோசலிச மயமாக்கப்பட வேண்டும். இது எல்லா மட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகப் பதவி உயர்வை எடுத்துக் கொள்வோம். ஒரு முதலாளிய நிறுவனத்தில் அனைத்தும் நிறுவனத்தின் லாபத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். கொள்கைகளும் நோக்கங்களும் அங்கு முதன்மைப் படுத்தப்படுவதில்லை. லாபமே அங்கு கொள்கையாகவும், நோக்கமாகவும் அமைகிறது. எனவே திறமை ஒன்றே அங்கு பதவி உயர்வுக்கு அடிப்படையாகிறது. இந்தத் திறமையும் மேலிருந்தே அளக்கப்படுகிறது. ஆனால் ஒரு மக்கள் ராணுவத்தில் ஒருவனின் செயல் திறமைக்கு முக்கியத்துவம் அளிக்கிற அதே நேரத்தில் அவன் எந்த அளவுக்கு அரசியல் புரிதல் கொண்டிருக்கிறான் என்பதும், மக்களைச் சார்ந்திருக்கிறான் என்பதும் முக்கியமாகின்றன. பதவி உயர்வு என்பது மேலிருந்து தீர்மானிக்கப்படுவதாக இல்லாமல் கீழிருந்து (அதாவது தேர்வு அடிப்படையில்) தீர்மானிக்கப்படுவதாக இருப்பது நல்லது. இதன் பொருள் அதீத ஜனநாயகமல்ல; கட்டுப்பாடுகளை மறுதலிப்பதல்ல; மாறாக இத்தகைய சூழலிலேயே உண்மையான கட்டுப்பாடுகள் விளங்கும். இதுபோன்ற இதர வடிவங்களை இதர மக்கள் யுத்த அனுபவங்களிலிருந்து பெறலாம்.

2. ராணுவத் தலைமைக்கு அரசியல், ஸ்தாபனத் தலைமைகள் கட்டுப்பட்டதாக இருக்கும் நிலைமை நீக்கப்பட வேண்டும். ராணுவம் அரசியற் கடமைகளை நிறைவேற்றும் சாதனம் மட்டுமே. போரிடுவது மட்டுமே ராணுவத்தின் குறிக்கோளல்ல. மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதும், மக்களின் நம்பிக்கையைப் பெறுவதும், மக்களை ஆயுத பாணியாக்குவதும் ராணுவத்தின் பணியே. சுத்த ராணுவக் கண்ணோட்டம் நீக்கப்பட வேண்டும்.

3. சுத்த ராணுவக் கண்ணோட்டத்தின் ஊற்று மூலமான அணிகள் மத்தியிலான தாழ்ந்த அரசியற் தரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தையும் கூலிப்படை மனப்பான்மையையும் போக்க வேண்டும். இதனை இரண்டு வழிகளில் நிறைவேற்றலாம்.

அ. அணிகளுக்குத் தொடர்ச்சியான அரசியற் கல்வியை அளிப்பதன் மூலம் அவர்களின் அரசியற் தரத்தை உயர்த்துவது.

ஆ. கூலிப்படை மனப்பான்மையைப் போக்குவதற்கு அதிக அளவில் அடித்தட்டு வர்க்கத்தினரையும், பாட்டாளிகளையும் அமைப்புக்குள் கொண்டு வருவதும் அவர்களை முக்கிய நிலைக்கு உயர்த்தும் வாய்ப்பை அதிகப்படுத்துவதும் முக்கியம்.

4. கீழ்மட்ட ஸ்தாபனங்கள் மேல்மட்ட ஸ்தாபனங்களைத் தொடர்ந்து விமர்சனம் செய்கிற வாய்ப்பை வழங்கி அதனை ஊக்குவிக்க வேண்டும். கீழ்மட்டங்களிலிருந்து வரும் விமர்சனங்களினடிப்படையில் புலனாய்வு, விசாரணை முதலியவை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

5. கடமை உணர்வு, நேர்மை, உண்மை, ஒழுக்கம், தூய்மை போன்ற பண்புகளை மக்கள் மத்தியில் கடைப்பிடிக்காதவர்கள் எத்தகைய தியாகம் செய்தவர்களாயினும் பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும். மக்களிடம் நம்பிக்கையைக் குறைக்கும் எந்த வழிகளிலும் அமைப்புக்குப் பொருள் சேர்க்க முயலக் கூடாது.

6. கூலி மனப்பான்மை, இன்பநாட்டம், ஊக்கமின்மை, ராணுவத்திலிருந்து விலகும் ஆசை ஆகிய பண்புடையோர் முக்கிய பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

7. எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றுவது என்பதில் மேற்பார்வை இடுவது என்பது குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் Checking Inspector மனப்பான்மையோடில்லாமல் தொடர்புடைய களத்திற்குச் சென்று அங்குள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் கருத்துக்களை அறிந்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

8. முடிவுகள் எடுப்பது மேலிருப்பவர்களின் உரிமை என்றில்லாமல் ஒவ்வொரு முடிவையும் சனநாயக அடிப்படையில் எடுப்பதோடு கீழிருப்பவர்களின் கருத்துக்கள் முடிவெடுப்பதில் தீர்மானகரமான பங்கு வகிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

9. கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை அமைப்பு சனநாயகப்படுத்தப்பட வேண்டும். முறையான தேர்தல், முறையான பிளீனம், முறையான ஸ்தாபனக் கூட்டம் முதலியவை கூட்டப்பட வேண்டும்.

10. ராணுவம், அரசியல் அமைப்பு, புலனாய்வு, விசாரணை, நடவடிக்கைக் குழு முதலியவை ஒன்றிலிருந்து ஒன்று சுயேச்சையாகவும் சனநாயக அடிப்படையிலும் இயங்குகிற அளவிற்கு ஒவ்வொரு அமைப்பும் அதற்கேற்ற வகையில் விதிமுறைகளை புனரமைத்துக் கொள்ள வேண்டும். தவறுகள், சந்தர்ப்பவாதங்கள், தனிநபர் அராஜகங்கள் முதலியவை உடனடியாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு தவறுகள் நீக்கப்படும் அளவிற்கு ஓட்டை உடைசலற்ற (Fool proof) சட்ட விதிகள் அமைக்கப்பட வேண்டும்.

11. அரசியற் கல்வியின் முக்கியத்துவத்தை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். எந்த அரசியல் என்கிற கேள்வி எழுவது இயல்பு. இந்தக் கட்டுரைத் தொடக்கத்திலிருந்து முன் வைக்கப்படும் விவாதங்களின் அடிப்படையில் அதுமார்க்சிய—லெனினியக் கல்வியே என்பது தெளிவு. **என்வே விடுதலை அமைப்புக்களின் தத்துவமாக மார்க்சிய—லெனினியம் அறிவிக்கப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையை ஏற்றுக் கொள்வதை அறிவிக்க வேண்டும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## IV. முடிவாக...

இது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். முதலாளி வர்க்கம் உட்பட இதர தேசிய வர்க்கங்களையும் இணைத் துத்தானே இதனை நாம் வென்றெடுக்க வேண்டும்? மார்க்சிய—லெனினிய தத்துவ வழிகாட்டல், பாட்டாளி வர்க்கத்தின் தலைமை என்பதெல்லாம் எந்த அளவிற்குச் சரி? தமிழகத்தைப் பின்தளமாக வைத்துச் செயல்படுகிற சூழலில் இந்த அறிவிப்புக்கள் இந்திய அரசின் பார்வை யில் ஏற்படுத்தும் மாற்றத்தைப் பற்றி யோசிக்க வேண் டாமா?—என்பன போன்ற நியாயமான கேள்விகள் எழுவது இயல்புதான்.

இது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர சகாப்தம் என்பதை யும், இலங்கை ஒரு அரைக் காலனிய—அரை நிலப்பிர புத்துவ நாடு என்பதையும், பெறுகிற விடுதலை பரந்து பட்ட மக்களின் விடுதலையாக அமைய வேண்டும் என்ப தனையும், இந்திய மக்களையும், புரட்சிகர சக்திகளையும் விலக்கி விட்டு இந்திய அரசைக் கடந்த காலத்தில் முழுமை யாகச் சார்ந்திருந்ததன் விளைவுகளையும் கவனத்திலெடுத் துக் கொண்டு இந்தக் கேள்விக்கான பதில்களை நாம் தீர் மானிக்க வேண்டும்.

மேற்கண்ட கேள்விகளின் அடிப்படையில் ஈழத்துச் சமூகப்படி நிலைகளை மறு உற்பத்தி செய்யும் நிறுவன மாக விடுதலை அமைப்புக்களை நாம் அமைத்துக் கொண் டால் விடுதலை இயக்கங்களில் நாம் தொடக்கத்தில் குறிப் பிட்ட தேக்கங்கள் தர்க்க பூர்வமான முடிவுதான் என்பதை யும் உட்கட்சிப் போராளிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இடது சாரி உட்கட்சிப் போராளிகளே! வளர்ந்து வரும் சக்திகள் நீங்களே! எதிர்காலம் உங்களுடையதே நம்பிக்கையோடு போராடுங்கள்!

---

dignity printers madras 600 005

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தோழமை வெளியீடுகள்

இதுவரையில்...

- அடிமைகள்
  கே. டானியல்
  நூலகப் பதிப்பு ரூ 22—00 மக்கள் பதிப்பு: ரூ 16—00
- கதைப்பாடல்களும் சமூகமும்
  கோ. கேசவன்
  ரூ. 9—00
- நமது கல்விப் பிரச்சினைகள்—
  புதிய கல்வி கொள்கை பற்றிய ஒரு பார்வை
  அ மார்க்ஸ்
  ரூ4—50
- கானல்
  கே. டானியல்
  (அச்சில்)

இனி வருவன...

- மூன்றாவது பாதை
  ஜமாலன்
- ரஷ்யக்கரடியின் இன்னொரு முகம்
  (ஓர் ஆலை தொழிலாளியின் பார்வையில்
  குருஷேவ் முதல் கோர்ப்புசேவ் கும்பல்வரை)
  ராசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோழமைப் பொறி வரிசை: 2
ஏப்ரல் 1986.

தோழமை
20, கோதண்டபாணித் தெரு
கும்பகோணம்—612 001.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்